**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# முதியோர் ஓய்வூதியம் ரூ.1,200-ஆக அதிகரிப்பு

**சென்னை, ஜூலை 22:** முதியோர் ஓய்வூதியம் உள்பட ஆறு வகையான திட்டங்களின் கீழ் அளிக்கப்படும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.1,200-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாதந்தோறும் 1,000 ரூபாயாக வழங்கப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக ரூ.200 சேர்த்து, வரும் ஆகஸ்ட் மாதம் முதல் அளிக்கப்பட உள்ளது.

தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டம் காலை 10.30 மணிக்கு தொடங்கி 11.40 மணிக்கு நிறைவடைந்தது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழகத்தில் முதியோர் ஓய்வூதியம் உள்பட பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் வழியாக அளிக்கக் கூடிய மாத ஓய்வூதியம் ரூ.1,000-லிருந்து இருந்து ரூ.1,200-ஆக உயர்த்தி வழங்க அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இந்திரா காந்தி தேசிய ஓய்வூதியத் திட்டம், மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம், கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்றோர் ஓய்வூதியத் திட்டம் உள்பட பல்வேறு திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.

தமிழ்நாட்டில் கடந்த 1962-ஆம் ஆண்டில்தான் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

அன்றைக்கு மாதத்துக்கு ரூ.20 அளிக்கப்பட்டது. கடந்த 1962-ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு காலகட்டங்களில் ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு, இப்போது மாதம் ரூ.1,000 அளிக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம் கடந்த ஜனவரி 1-ஆம் தேதியில் இருந்து ரூ.1,500-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**எத்தனை பேருக்கு பயன்?:** அனைத்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் மூலமாக, 30 லட்சத்து 55 ஆயிரத்து 857 பேர் மாதாந்திர ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். அவர்களுக்கு உதவி செய்யக் கூடிய வகையில், மாத ஓய்வூதியத்தை ரூ.1,000-லிருந்து ரூ.1,200- ஆக உயர்த்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் வேண்டுமெனக் கோரி காத்திருப்போர் பட்டியலில் 74,073 பேர் உள்ளனர். அவர்களில் தகுதியானவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும். ஓய்வூதியத்தை ரூ.1,200- ஆக உயர்த்துதல், கூடுதலாகப் பயனாளிகளைச் சேர்த்தல் போன்ற நடவடிக்கைகளால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.845.91 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். உயர்த்தப்பட்ட ஓய்வூதியமானது பல்வேறு துறைகளின் வாயிலாகச் சென்றடையும்.

கைத்தறித் துறை மூலமாக திட்டங்களில் பதிவு செய்திருப்போர், தொழிலாளர் நலத் துறையின் கீழ் பல்வேறு தொழிலாளர் நல வாரியங்களில் இருப்போருக்கும் உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் அளிக்கப்படும். நலவாரியங்களில் 1.34 லட்சம் தொழிலாளர்களும், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்திருப்போரும் பயன்பெறுவர். உயர்த்தப்பட்ட ஓய்வூதியத் தொகை ஆகஸ்ட் மாதத்தில் இருந்து கிடைக்கும்.

ஓய்வூதியம் உயர்த்தப்படுவதன் மூலம், வருவாய் பற்றாக்குறைகள் பெரிய அளவுக்கு அதிகரிக்காது. நிதி மேலாண்மையைப் பொருத்தவரையில் குறைபாடுகள் இல்லாத வகையில், நிதிநிலையை சிறப்பாகக் கொண்டு செல்லும் வகையில், நிதித் துறைச் செயலர் உள்ளிட்ட திறமையான அலுவலர்களையும், கட்டமைப்பையும் பெற்று இருக்கிறோம் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

நிதித் துறை முதன்மைச் செயலர் த.உதயச்சந்திரன் உள்ளிட்ட உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

## ஆகஸ்ட் முதல் அமல்



## 6 வகையான திட்டங்கள்...

இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம், இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம், இந்திரா காந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், ஆதரவற்ற-கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம், 50 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் ஆகிய 6 வகையான திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.1,000 அளிக்கப்படுகிறது. இப்போது, அந்தத் தொகை ரூ.1,200 -ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மொத்த பயனாளிகள் எண்ணிக்கை | 30,55,857 |
| காத்திருக்கும் பயனாளிகள் | 74,073 |
| கூடுதல் செலவு | ரூ.845.91 கோடி |

## தமிழக அமைச்சரவை ஒப்புதல்

## 1962–இல் ரூ.20; 2023-இல் ரூ.1,200

முதியோர் மாத ஓய்வூதியத் தொகையானது 1962–இல் ரூ.20–இல் தொடங்கி 11 முறை உயர்வுகளைக் கண்டு, இப்போது ரூ.1,200 ஆகியுள்ளது. ஆண்டுகளும், உயர்த்தப்பட்ட ஓய்வூதியத் தொகையும் குறித்த விவரம்:

| | |
|---|---|
| 01.04.1962 | ரூ.20 |
| 01.04.1979 | ரூ.25 |
| 01.04.1982 | ரூ.35 |
| 01.05.1989 | ரூ.50 |
| 01.02.1992 | ரூ.75 |
| 01.07.1995 | ரூ.100 |
| 01.04.1998 | ரூ.150 |
| 01.04.2000 | ரூ.200 |
| 01.08.2006 | ரூ.400 |
| 01.12.2010 | ரூ.500 |
| 01.05.2011 | ரூ.1,000 |
| 22.07.2023 | ரூ.1,200 |

## மகளிர் உரிமைத் தொகை முகாம் நாளை தொடக்கம்

**சென்னை, ஜூலை 22:** மகளிர் உரிமைத் தொகைக்கான விண்ணப்பப் பதிவு முகாமை தருமபுரி மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை (ஜூலை 24) தொடங்கி வைக்கிறார்.

'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டத்துக்கான விண்ணப்பங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பெற தமிழகம் முழுவதும் முகாம்கள் அமைக்கப்பட உள்ளன. இந்த முகாம்கள் மூலமாக வரும் திங்கள்கிழமை முதல் விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளன.

**தருமபுரியில் தொடக்கம்:** தருமபுரியில் உள்ள தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், மகளிர் உரிமைத் தொகைக்கு விண்ணப்பிக்கும் முகாமை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை தொடங்கி வைக்கிறார். இதைத் தொடர்ந்து, அருகில் அமைக்கப்பட்டுள்ள மேடையில் அவர் உரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக, அவர் சென்னையில் இருந்து விமானம் மூலமாக சேலம் மாவட்டம் ஓமலூர் செல்கிறார். அங்கிருந்து கார் மூலம் தொப்பூர் சென்றடைகிறார். பின்னர் மீண்டும் ஓமலூர் வந்து அங்கிருந்து விமானம் மூலம் திங்கள்கிழமை மாலை சென்னை வருகிறார்.

**ட்விட்டரில் பதிவு:** முதல்வர் ஸ்டாலின் ட்விட்டரில் சனிக்கிழமை வெளியிட்ட பதிவு: தமிழ்நாட்டு மகளிரின் முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம் 1989-ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. அந்தத் திட்டம் தொடங்கப்பட்ட அதே தருமபுரி மண்ணில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கான முகாமை வரும் திங்கள்கிழமை தொடங்கி வைக்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

**அமைச்சர்களுக்கு அறிவுறுத்தல்:** மகளிர் உரிமைத் திட்ட முகாம்களை நேரில் சென்று பார்வையிட வேண்டுமென அமைச்சர்கள் அனைவரையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை மூலமாக அறிவுறுத்தியுள்ளார்.

# சென்னையில் 3 தவணையாக 'இந்திரதனுஷ் 5.0' தடுப்பூசி முகாம்

**சென்னை, ஜூலை 22:** சென்னை மாநகராட்சிப் பகுதியில் ஆக.7 முதல் 3 தவணைகளில் இந்திரதனுஷ் 5.0 தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளதாக மேயர் ஆர்.பிரியா தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற உள்ள தீவிர மிஷன் இந்திரதனுஷ் 5.0 தடுப்பூசி முகாம் குறித்த மாவட்ட பணிக்குழுக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் ரிப்பன் மாளிகை வளாகக் கூட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் இந்திரதனுஷ் 5.0 தடுப்பூசி செயல்பாட்டு வழிமுறை கையேட்டை மேயர் வெளியிட்டார்.

அப்போது அவர் பேசியது: இந்தியாவில் முதன்முறையாக 2014-ஆம் ஆண்டு இந்திரதனுஷ் தடுப்பூசி முகாம் தொடங்கப்பட்டது. சென்னை மாநகராட்சியில் முதல் இந்திரதனுஷ் தடுப்பூசி முகாம் 22.06.2015 முதல் 30.06.2015 வரை நடைபெற்றது. இதுவரை 2015-ஆம் ஆண்டில் 5 முறை, 2016-ஆம் ஆண்டில் 2 முறை மற்றும் 2022-ஆம் ஆண்டில் ஒரு முறை என மொத்தம் 8 முறை நடைபெற்றுள்ளது.

இதைத் தொடர்ந்து மாநகராட்சியின் அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் மூன்று தவணைகளில் தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது. முதல் தவணை ஆக.7 முதல் 12-ஆம் தேதி வரையும், இரண்டாம் தவணை செப்.11-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரையும், மூன்றாம் தவணை அக்.9-ஆம் தேதி முதல் 14-ஆம் தேதி வரையும் காலை 9 முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

இம்முகாமில் 2 வயதுக்குள்பட்ட அனைத்து குழந்தைகள், 2 முதல் 5 வயதுக்குள்பட்ட விடுபட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி முகாம் நாள்களில் தடுப்பூசி போடப்படும். புலம் பெயர்ந்து வாழும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடப்படும்.

இந்த தடுப்பூசி மூலம் காசநோய், போலியோ, மஞ்சள் காமாலை, தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னி, நிமோனியா காய்ச்சல், தட்டம்மை மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் ஆகிய நோய்களிலிருந்து குழந்தைகளைக் காக்க முடியும். இதில் தடுப்பூசி செலுத்த தகுதியான குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களை கணக்கெடுக்கும் பணி ஜூலை 18-ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது என்றார் அவர்.

கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## மேயர் பிரியா



சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற உள்ள 'இந்திர தனுஷ் 5.0' தடுப்பூசி முகாம் தொடர்பாக ரிப்பன் மாளிகை கூட்டரங்கில் நடைபெற்ற மாவட்ட பணிக்குழுக் கூட்டத்தில் தடுப்பூசி செயல்பாட்டு வழிமுறை கையேட்டினை வெளியிட்ட மேயர் ஆர்.பிரியா. உடன் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், ஸ்டான்லி மருத்துவமனை முதல்வர் டாக்டர் பாலாஜி, மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ்.பானுமதி உள்ளிட்டோர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நவீன தொழில்நுட்பங்கள் ஏழைகளுக்கு பயனளிக்க வேண்டும்

**உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்**




சென்னை ஐஐடி-இன் 60-ஆவது பட்டமளிப்பு விழாவில் மாணவருக்கு பட்டம் வழங்கிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி. ஒய்.சந்திரசூட். உடன், சென்னை ஐஐடி நிர்வாகக் குழுத் தலைவர் பவன் கோயங்கா, இயக்குநர் வி.காமகோடி.

**சென்னை, ஜூலை 22:** நவீன தொழில்நுட்பங்கள் ஏழை மக்களைச் சென்றடைந்து பயனளிக்க வேண்டும் என சென்னை ஐஐடி பட்டமளிப்பு விழாவில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் வலியுறுத்தினார்.

சென்னை ஐஐடி-இன் 60-ஆவது பட்டமளிப்பு விழா கிண்டியில் உள்ள அதன் மைய வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு சென்னை ஐஐடி நிர்வாகக் குழு தலைவர் பவன் கோயங்கா தலைமை வகித்தார். முன்னிலை வகித்த இயக்குநர் வி.காமகோடி ஆண்டறிக்கையைத் தாக்கல் செய்து உரையாற்றினார். தொடர்ந்து இளநிலை, முதுநிலை, ஆய்வுப் படிப்புகளை முடித்த 2,572 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

**மாணவர்களுக்கு விருது:** இது தவிர 'இந்திய குடியரசுத் தலைவர் விருது' - சாய் கௌதம் ரவிபதி, 'விபுரி விவாசன் நினைவு விருது' - நேகா சுவாமிநாதன், 'டாக்டர் சங்கர் தயாள் சர்மா விருது' - ஷோடாக்ஷி சாரங்கி, 'ஆளுநர் விருது' - பிரஹலாத் ஆகிய மாணவர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

விழாவில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் பேசியது:

சென்னை ஐஐடி கடந்த 64 ஆண்டுகளாக கல்வி, ஆராய்ச்சி, தொழில்நுட்பம் என பல்வேறு அம்சங்களில் சிறந்த பங்களிப்பை அளித்து வருகிறது. சென்னை ஐஐடி போன்ற கல்வி நிறுவனங்கள் இந்திய சமூகத்தை மாற்றியுள்ளன.

இன்றைய நவீன தொழில்நுட்ப வேகத்துக்கு சட்டத் துறையால் ஈடு கொடுக்க முடியாது என பலர் கருதுகின்றனர். ஆனால், சட்டம், தொழில்நுட்பம் ஆகியவை ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று உதவியாக இருந்துள்ளன என்பதற்கு நமது வரலாறு ஓர் சான்றாகும். மாணவர்களிடம் இரு கேள்விகளை முன்வைக்கிறேன். உங்கள் தொழில்நுட்பத்தின் மதிப்பீடுகள் என்ன? அதற்காக இழக்கப் போவது என்னென்ன? என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**காணொலியில் விசாரணை:** கரோனா காலத்தில் காணொலி மூலம் பல லட்சக்கணக்கான வழக்குகளின் விசாரணைகள் நடத்தப்பட்டன. இது நீதித் துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இன்று மக்கள் தங்களுக்கான நீதியை எளிதாக அணுக உதவுகிறது. எனினும், தொழில்நுட்பம் என்பது இந்த சமூகத்தின் வெற்றிடத்தில் அமைவதல்ல. நமது சட்டம், பொருளாதாரம் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. அதன்படி உங்களின் கண்டுபிடிப்பும் ஒருநாள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படலாம். எனவே, தங்களின் ஆராய்ச்சிகள் எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உறுதிசெய்து அதற்கான எல்லையை வரையறுக்க வேண்டும்.

**மனித நலனுக்கு...** உங்களின் கண்டுபிடிப்பு இந்த சமூகத்தில் பயன்படுத்தப்படும்போது அது மனித நலனுக்கானதாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு அறிவியல் கண்டுபிடிப்பும் தனி மனிதர்களை பாதிக்க வாய்ப்புள்ளது. உதாரணமாக கடிதங்களை எடுத்துக் கொள்வோம். கடித வழி கருத்துப் பரிமாற்றம் தாமதத்தை ஏற்படுத்தியது. அதன்பின் வந்த மின்னஞ்சல்களில் கருத்துகள் கசியும் ஆபத்து இருந்தது. இதையடுத்து தனிமனித உரிமைகள் அதிக கவனம் பெற்றன. ஆனால், இப்போது கசிந்துவிடுமோ என்ற அச்சமின்றி ஒரு குறுஞ்செய்திகூட நம்மால் அனுப்ப முடியவில்லை.

**தொழில்நுட்பமும், சட்டங்களும்...** மனிதர்களை ஒன்றிணைக்க உருவாக்கப்பட்ட சமூக ஊடகங்களில் தற்போது இணைய சீண்டல்களும் நடைபெறுகின்றன. இதுவே, தொழில்நுட்பமும், சட்டங்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதை உணர்த்துகிறது. புதிய தொழில்நுட்பங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க முடியாத சூழலில் சட்டமே நுழைந்து தனி மனிதர்களைப் பாதுகாக்கும். அதே போல், தற்போதைய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமும் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அதேநேரம் இந்த செயற்கை நுண்ணறிவு மனிதர்களுக்கு எதிராகத் திரும்பிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில், செயற்கை நுண்ணறிவு மூலம் போலியான புகைப்படங்களை உருவாக்குதல் போன்ற தவறுகளை செய்ய முடியும். எனவே, அதற்கான வரையறைகளை நாம் வகுக்க வேண்டியது அவசியம். நவீன தொழில்நுட்பங்கள் ஏழை மக்களை சென்றடைந்து பயனளிக்க வேண்டும். மேலும், எதிர்காலத்தில் சமுதாய வளர்ச்சியில் அறிவியலும், தொழில்நுட்பமும் முக்கிய பங்கு வகிக்கும் என்றார் அவர்.

# வலுவான வங்கித் துறையைக் கொண்ட நாடுகள் பட்டியலில் இந்தியா

**பிரதமர் மோடி பெருமிதம்**



மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் நிகழ்ச்சியில் காணொலி மூலம் பேசிய பிரதமர் நரேந்திர மோடி.

**புது தில்லி, ஜூலை 22:** பாஜக தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக வலுவான வங்கித் துறையைக் கொண்ட நாடுகள் பட்டியலில் இந்தியா இணைந்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 70,000 பேருக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கும் நிகழ்ச்சி நாட்டின் பல்வேறு பகுதிகளில் சனிக்கிழமை நடைபெற்றது. அதில் பிரதமர் மோடி காணொலி வாயிலாகக் கலந்து கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:

தற்போது பணி நியமன ஆணைகளைப் பெற்றுள்ளவர்களில் பெரும்பாலானோர் வங்கிகளில் பணியாற்ற உள்ளனர். முந்தைய காங்கிரஸ் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் வங்கித் துறை சீரழிவைச் சந்தித்தது. அப்போது, காங்கிரஸ் கட்சியின் தலைவர்களுக்குத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டன. அதையும் தொலைபேசி மூலமாக வங்கிகளிடம் பேசியே காங்கிரஸ் தலைவர்கள் பெற்று வந்தனர்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் குடும்பத்தினருக்கும், தெரிந்த நபர்களுக்கும் கோடிக் கணக்கில் வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டன. அவை திரும்பச் செலுத்தப்படவில்லை. அதன் காரணமாக, வங்கி அமைப்பின் அடித்தளம் பாதிக்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அதிகாரத்தின் மீதான பேராசை காரணமாக தேச நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

**சீர்திருத்த நடவடிக்கைகள்:** மத்தியில் பாஜக அரசு பொறுப்பேற்ற பிறகு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. வங்கிகளின் நிர்வாகம் வலுப்படுத்தப்பட்டது. சிறு வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டன. வங்கிகளில் நிபுணத்துவம் கொண்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். திவால் சட்டமானது வாராக்கடன்களில் இருந்து வங்கிகளைப் பாதுகாத்து வருகிறது. அத்தகைய சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக வங்கித் துறை புத்துணர்ச்சி பெற்றது.

முந்தைய ஆட்சிக் காலங்களில் பொதுத் துறை வங்கிகள் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பில் இயங்கி வந்தன. அந்த வங்கிகளின் வாராக் கடனும் அதிகரித்துக் காணப்பட்டது. தற்போது பொதுத் துறை வங்கிகள் லாபத்தைப் பதிவு செய்துள்ளன. வங்கி அதிகாரிகள் தற்போது சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர். மக்களுக்கு சேவை ஆற்றுவது மட்டுமல்லாமல், அரசின் திட்டங்களை ஏழைகளுக்கும், அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கும் கொண்டுசேர்ப்பதில் வங்கிப் பணியாளர்கள் முக்கியப் பங்கு வகித்து வருகின்றனர்.

**சர்வதேச கவனம் அதிகரிப்பு:** 'முத்ரா' திட்டத்தின் கீழ் கடனுதவி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உதவி உள்ளிட்டவற்றை வங்கிகள் திறம்பட வழங்கி வருகின்றன. வங்கியில் சேமிப்புக் கணக்கில் உள்ள ரூ.5 லட்சம் வரையிலான தொகைக்கு காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலமாக 99 சதவீத வங்கிக் கணக்கு வைத்துள்ளோரின் சேமிப்புத் தொகை பாதுகாக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு மேற்கொண்ட பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, வலுவான வங்கித் துறையைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் தற்போது இணைந்துள்ளது. உலக நாடுகளின் நம்பிக்கையை இந்தியா பெற்றுள்ளது. இந்தியா மீதான சர்வதேச கவனம் அதிகரித்துள்ளது. பல்வேறு துறைகளில் அதிகரித்து வரும் வாய்ப்புகளை இந்தியா திறம்படப் பயன்படுத்திக் கொள்ளும்.

**பெரும் பொருளாதார சக்தி:** 1947-ஆம் ஆண்டு இதே நாளில் (ஜூலை 22) இந்திய மூவண்ணக் கொடிக்கு அரசியல் நிர்ணய சபை ஒப்புதல் அளித்தது. இதே நாளில் ஆயிரக்கணக்கானோருக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது சிறப்புமிக்கதாக உள்ளது. அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சர்வதேச பொருளாதார மதிப்பில் 10-ஆவது இடத்தில் இருந்த இந்தியா, தற்போது 5-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் இந்தியா 3-ஆவது பெரிய பொருளாதார சக்தியாக உருவெடுக்கும் எனப் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அது மிகப் பெரிய சாதனையாக இருக்கும். அதன் காரணமாக, அனைத்துத் துறைகளிலும் வேலைவாய்ப்புகள் அதிகரித்து, மக்களின் வருமானம் உயரும்.

**வறுமை ஒழிப்பு:** கடந்த 5 ஆண்டுகளில் 13 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் வறுமையில் இருந்து விடுபட்டுள்ளதாக நீதி ஆயோக் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசு செயல்படுத்தி வரும் வீட்டு வசதித் திட்டம், தூய்மை இந்தியா திட்டம், ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டம், ஏழைகளுக்கு மின்சார வசதி வழங்கும் திட்டம் உள்ளிட்டவற்றை அரசு அதிகாரிகள் திறம்பட அமல்படுத்தியதே அதற்குக் காரணம்.

இந்தியாவில் ஏழ்மையை முற்றிலுமாக ஒழிக்க முடியும் என்பதற்கு இது சான்றாகத் திகழ்கிறது. அதில் அரசுப் பணியாளர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

**இளைஞர்களுக்கு வாய்ப்புகள்:** பல நாடுகளில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து, பணியாற்றும் திறனுள்ளோரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. அதே வேளையில், இந்திய இளைஞர்களின் திறன் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் இந்திய இளைஞர்களுக்குப் பல்வேறு வாய்ப்புகள் காணப்படுகின்றன. நாட்டில் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதைக் கருத்தில்கொண்டு இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது என்றார் பிரதமர் மோடி.

# பருவநிலை இலக்குகளை நோக்கி முன்னேறும் இந்தியா

## ஜி20 கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி உரை

**பனாஜி, ஜூலை 22:** பருவநிலை மாறுபாட்டைத் தடுப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதை நோக்கி இந்தியா முன்னேறி வருவதாக ஜி20 நாடுகளின் எரிசக்தி அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜி20 கூட்டமைப்புக்கு இந்தியா தலைமை வகித்து வருகிறது. வரும் செப்டம்பரில் ஜி20 கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு தில்லியில் நடைபெறவுள்ளது. இதனிடையே, அந்த நாடுகளின் அமைச்சர்களுக்கான பல்வேறு கூட்டங்களை இந்தியா தொடர்ந்து நடத்தி வருகிறது.

இந்நிலையில், ஜி20 நாடுகளின் எரிசக்தி அமைச்சர்களுக்கான கூட்டம் கோவா தலைநகர் பனாஜியில் சனிக்கிழமை நடைபெற்றது. அதில் பிரதமர் மோடி காணொலி வாயிலாக உரையாற்றியதாவது:

பசுமை வளர்ச்சி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றில் இந்தியா தொடர்ந்து முன்னேறி வருகிறது. உலகிலேயே அதிக மக்கள்தொகையைக் கொண்ட நாடாகத் திகழும் இந்தியா, வேகமாக வளரும் பொருளாதாரமாகவும் உள்ளது. அதே வேளையில், பருவநிலை மாறுபாட்டைத் தடுப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதை நோக்கியும் இந்தியா தொடர்ந்து முன்னேறி வருகிறது.

படிம எரிபொருளைச் சாராமல் எரிசக்தி உற்பத்தி செய்வதற்கான இலக்கை 9 ஆண்டுகள் முன்கூட்டியே இந்தியா வெற்றிகரமாக அடைந்துள்ளது. அதன் காரணமாக அந்த இலக்கு தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள் வாயிலாக உற்பத்தி செய்யப்படும் மின்சார அளவை ஒட்டுமொத்த மின்சார உற்பத்தியில் 50 சதவீதமாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சூரிய எரிசக்தி, காற்றாலை எரிசக்தி உற்பத்தியில் சர்வதேச அளவில் இந்தியா முன்னிலை வகித்து வருகிறது. நவீன, நீடித்த, மலிவான, ஒருங்கிணைந்த, பசுமை எரிசக்திக்கு மாறுவதற்கான நடவடிக்கைகளை ஜி20 கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டும்.

அதன்மூலம் தெற்குலக நாடுகள் பெரும் பலனடையும். பசுமை எரிசக்தியை உற்பத்தி செய்வதற்காக வளர்ந்து வரும் நாடுகளுக்குக் குறைந்த வட்டியுடன் கடனுதவிகள் வழங்கப்பட வேண்டும்.

ஒருங்கிணைந்த செயல்பாடு: எரிசக்தி உற்பத்தி சார்ந்த நவீன தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்தல், எரிசக்தி விநியோகச் சங்கிலியை விரிவாக்குதல் உள்ளிட்டவற்றுக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும். எதிர்காலத்துக்கான எரிபொருள்களை உருவாக்குவதில் அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.



மின்பகிர்மான அமைப்புகளைப் பல நாடுகளுடன் ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் மூலம் சர்வதேச எரிசக்திப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதோடு, மற்ற நாடுகளும் பருவநிலை இலக்குகளை நோக்கி முன்னேற முடியும். இது பசுமை எரிசக்தித் துறையில் முதலீடுகளை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும்.

எரிசக்தியே அடிப்படை: நாடுகளின் எதிர்கால வளர்ச்சியானது எரிசக்தியை சார்ந்தே அமைந்துள்ளது. தனிநபரின் வளர்ச்சி முதல் நாட்டின் வளர்ச்சி வரை எரிசக்தி பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும் திறன் கொண்டது. பசுமை எரிசக்திக்கு மாறுவதில் ஜி20 நாடுகளின் பயணம் வெவ்வேறாக இருந்தாலும் சென்றடைவதற்கான இலக்கு ஒன்றாகவே உள்ளது.

கடந்த 9 ஆண்டுகளில் இந்தியாவில் 19 கோடிக்கும் அதிகமான குடும்பங்களுக்கு எல்பிஜி சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சார வசதியும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது வீடுகளுக்குக் குழாய் வழியாக சமையல் எரிவாயு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த சில ஆண்டுகளில் 90 சதவீத குடும்பங்களுக்கு அத்தகைய வசதி வழங்கப்படும்.

மின்சார வாகனங்கள்: கடந்த 2015-ஆம் ஆண்டில் எல்இடி விளக்குகளை அதிக அளவில் பயன்படுத்துவதற்கான திட்டம் தொடங்கப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் எல்இடி விளக்குகள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அதன் காரணமாக, ஆண்டுக்கு 4,500 கோடி யூனிட் மின்சாரம் சேமிக்கப்பட்டது.

வேளாண் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் பம்புகளை சூரிய எரிசக்தியின் வாயிலாக செயல்பட வைப்பதற்கான திட்டத்தையும் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தியாவின் மின்சார வாகன சந்தை வேகமாக வளர்ந்து வருகிறது. 2030-ஆம் ஆண்டுக்குள் ஒவ்வோர் ஆண்டும் ஒரு கோடி மின்சார வாகனங்கள் விற்பனையாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மையம்: 20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோலை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது. வரும் 2025-ஆம் ஆண்டுக்குள் அத்தகைய பெட்ரோலானது நாடு முழுவதும் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும். பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டத்தையும் இந்தியா முன்னெடுத்துள்ளது. பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியில் இந்தியாவை சர்வதேச மையமாக மாற்றவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கைமுறையை அனைவரும் முன்னெடுக்க வேண்டும். பூமியைக் காப்பதற்கான நடவடிக்கைகளை அனைத்து நாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்றார் பிரதமர் மோடி.

EVA STALIN IAS ACADEMY